# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு : 10

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மதிப்பெண்கள் : 50

பகுதி – அ

I சரியான விடையைத் தேர்வு செய்து குறியீட்டுடன் எழுதுக. 7X1=7

1. மொழி ஞாயிறு என்று அழைக்கப்படுபவர்
   (அ) பெருஞ்சித்திரனார் (ஆ) பாவாணர் (இ) தமிழழகனார் ஈ) இளங்குமரனார்
2. காசிக்காண்டம் என்பது
   அ) காசி நகரின் பெருமையைப் பாடும் நூல் ஆ) காசி நகரின் வரலாற்றைப் பாடும் நூல்
   இ) காசி நகரின் வேறு பெயர் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
3. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் அடி உணர்த்தும் செய்தி
   (அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் (ஆ) கடல்நீர் ஒலித்தல்
   (இ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
   (அ) குலைவகை (ஆ) இலைவகை (இ) கொழுந்துவகை ஈ) மணிவகை
5. அறிஞரது நூல், அறிஞருக்கு நூல் – என்னும் தொடர்களில் பொருளை வேறுபடுத்துவது
   (அ) உவம உருபு (ஆ) எழுவாய் (இ) உரிச்சொல் ஈ) வேற்றுமை உருபு

பாடலைப் படித்து வினா எண் 6,7க்கு விடையளிக்கவும்.

அன்று அவண் அசைஇ அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி

6. 'கடும்பு' என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது?
   அ) சுற்றம் ஆ) கூத்தர் இ) பள்ளம் ஈ) மலை
7. அசைஇ – என்பது எவ்வகை அளபெடை
   அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
   இ) செய்யுளிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

பகுதி – ஆ

II எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். 3x2=6
(வினா எண் 11க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)

8. வசன கவிதை – குறிப்பு வரைக.
9. இறடிப் பொம்மல் பெறுகுவிர் – இத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?
10. விடைக்கேற்ற வினா அமைக்க.
    அ. காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.
    ஆ) தனித்து உண்ணாமை தமிழர் விருந்தோம்பலின் அடிப்படை
11. "விடும்" என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

III எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. 2x2=4

12. ஒரு தொடரில் அமைக்க – மலை – மாலை ; விடு – வீடு
13. வேங்கை – இத்தொடர் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் அமைவதை விளக்குக.
14. தொகை வகை கண்டு தொடரில் அமைக்க – எழுகதிர், இன்சொல்

பகுதி – இ

IV ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

15. சோலைக்காற்றும் மின்விசிறி காற்றும் பேசிக்கொள்வது போல் உரையாடல் அமைக்க.
16. இளம்பயிர் வகை எவையேனும் ஐந்தனைத் தொடரில் அமைக்க.

V ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

17. "சிறு தாம்பு......" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
18. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறுவன யாவை?



www.Padasalai.Net

CS CamScanner

பகுதி – இ

VI ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

19. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

இப்பகுதியில் உள்ள தொகைநிலைத் தொடர்வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

20. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு
– இக்குறளில் அமைந்துள்ள அணியை விளக்குக.

பகுதி – ஈ

VII அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3X4=12

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



22. உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று, முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

23. தமிழில் மொழி பெயர்த்துத் தலைப்பிடுக.

*The golden sun sets up early in the morning and starts its bright rays to fad away the dark. The milky clouds start their wandering. The colourful Birds start Twitting their morning melodies in percussion. The cute butterfly dance around the flowers. The flowers's fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasure.*

(அல்லது)

புயலின் போது நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை எழுதுக.

பகுதி – உ

VIII அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2X6=12

24. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவர் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டை நும் பாடப்பகுதியால் விளக்குக.

(அல்லது)

ஆ) "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

25. அ) தமிழ்ச் சொல்வளம் குறித்தும் தமிழ்ச் சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) முல்லைப்பாட்டு உணர்த்தும் கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.



www.Padasalai.Net
CamScanner